*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.08*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Issue DOI: https://doi.org/10.63300/tm07042026

# Karl Graul's Unknown Tamil Commentary on Thirukkural

**G. Surya[1*], Dr. B. Jaiganesh[2],**
[1]PhD Research Scholar Department of Tamil, College of Science and Humanities, SRM Institute of Science and Technology, Kattankulathur, 603203, Chengalpattu District.
[2]Research Guide· Associate Professor, Department of Tamil, College of Science and Humanities, SRM Institute of Science and Technology, Kattankulathur, 603203, Chengalpattu District.
Mobile: 9884277395, Email: jaiganeb@srmist.edu.in
*Correspondence: suryagopi1103@gmail.com, Tel: 9585571481

**Article Info**
Received on 23-Mar-2026, Revised on 27-Mar-2026, Accepted on 27-Mar-2026, Published on 01-April-2026

## ABSTRACT

When analyzing the history of Tamil literature and publication, the 19th century stands out as a highly significant era. Following the arrival of the printing press, this became a golden age where many Tamil works, previously confined to palm-leaf manuscripts, began to be published. During this period, while local Tamil enthusiasts published numerous works, European Christian missionaries—drawn by the beauty of the Tamil language—also played a major role. Although their primary objective in coming to Tamil Nadu was the propagation of their religion, their passion for Tamil literature led them to introduce these works to the world. In this literary journey, the Thirukkural, the "Universal Veda," held a preeminent position. Throughout the 19th century, new editions, commentaries, and translations of the Thirukkural continued to emerge. Many European missionaries earned distinction by translating the Thirukkural into their mother tongues. Among such scholars, Karl Graul, a German scholar, is an important figure who remains largely unknown to the world of Tamil research. Karl Graul translated and published the Thirukkural in two languages: German and Latin. Prior to Graul's translation, in 1803, August Friedrich Cammerer had translated the Thirukkural into the German "Deutsch" language titled Des Tiruvalluwer Gedichte Und Denkspruche. Thirukkural With German Translation, Leipzig 1803 (Thirukkural Translations in World Languages, p. 76). Following this, Karl Graul translated the Thirukkural from Tamil into Latin. This translation was published posthumously. After Graul's death in 1864, his student William Germann edited and published the Latin translation manuscript, which included a Tamil commentary, titled: "Kural of Tiruvalluvar: High-Tamil text with Translation into Common Tamil and Latin, Notes and Glossary 1865." Despite the numerous translations and editions of the Thirukkural that have been released to date, Karl Graul's Latin translation—which includes a Tamil commentary—remains largely undiscussed. Therefore, the primary objective of this article is to examine Karl Graul's Latin edition of the Thirukkural and the nature of the Tamil commentary contained within that edition..

***KEYWORDS:*** *Karl Graul, Thirukkural, Tamil Commentary, 19th Century Tamil Literature, Latin Translation, German Translation, William Germann, August Friedrich Cammerer, Palm-leaf Manuscripts, Publication History.*

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07042026.08*

# கார்ல் க்ரவுலின் அறியப்படாத திருக்குறள் தமிழ் உரை

[1]**கோ.சூர்யா,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, எஸ்.ஆர்.அறிவியல் மற்றும் கலையியல் புலம், எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், காட்டாங்குளத்தூர், 603203, செங்கல்பட்டு மாவட்டம், கைப்பேசி_ 9585571481,
மின்னஞ்சல்: suryagopi1103@gmail.com, ORCID_ 0009-0005-5169-1918.

[2]**முனைவர் பா. ஜெய்கணேஷ்,** நெறியாளர், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அறிவியல் மற்றும் கலையியல் புலம், எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், காட்டாங்குளத்தூர், 603203, செங்கல்பட்டு மாவட்டம்,
கைப்பேசி_ 9884277395, மின்னஞ்சல்: jaiganeb@srmist.edu.in, ORCID- 0000-0003-2105-1205.

**முன்னுரை**

தமிழ் இலக்கியம் மற்றும் பதிப்பு வரலாற்றை ஆய்வு செய்யும்போது, 19ஆம் நூற்றாண்டு ஒரு மிக முக்கியமான காலகட்டமாகத் திகழ்கிறது. அச்சு இயந்திரங்களின் வருகைக்குப் பிறகு, ஏட்டுச் சுவடிகளில் முடங்கிக் கிடந்த பல தமிழ் நூல்கள் அச்சேறத் தொடங்கிய பொற்காலம் இது. இக்காலக்கட்டத்தில் உள்நாட்டுத் தமிழ் ஆர்வலர்கள் பல படைப்புகளைப் பதிப்பித்த அதே வேளையில், ஐரோப்பியக் கிறித்தவப் பாதிரிமார்களும் தமிழ் மொழியின் இனிமையால் ஈர்க்கப்பட்டுப் பெரும் பங்காற்றினர். அவர்கள் தங்கள் சமயத்தைப் பரப்புவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு தமிழகம் வந்திருந்தாலும், தமிழ் இலக்கியங்களின் மீதிருந்த பற்றால் அவற்றை உலக நாடுகளுக்குக் கொண்டு சென்றனர். இத்தகைய இலக்கியப் பயணத்தில், உலகப் பொதுமறை திருக்குறள் முதன்மையான இடத்தைப் பிடித்தது.

19ஆம் நூற்றாண்டில் திருக்குறளுக்குப் பதிப்புகள், புதிய உரைகள், மொழிபெயர்ப்புகள் தோன்றியபடியே இருந்தன. பல ஐரோப்பியப் பாதிரிமார்கள் திருக்குறளைத் தங்கள் தாய்மொழியில் மொழிபெயர்த்துப் பெருமை சேர்த்தனர். அத்தகு அறிஞர்களின் வரிசையில், தமிழ் ஆய்வு உலகம் பெரிதும் அறிந்திராத ஒரு முக்கியமான ஆளுமை கார்ல் க்ரவுல் (Karl Graul) எனும் ஜெர்மானிய அறிஞர் ஆவார். கார்ல் க்ரவுல் திருக்குறளை ஜெர்மன், லத்தீன் ஆகிய இரண்டு மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். க்ரவுல் மொழிபெயர்ப்பிற்கு முன்பே 1803ஆம் ஆண்டு திருக்குறளை ஜெர்மனிய 'டோய்ச்' மொழியில் **ஆகஸ்ட் ஃப்ரெடிக் காம்மெரர்** (Cammerer, A.F.) Des Tiruvalluwer Gedichte Und Denkspruche. Thirukkural With German Translation, Leipzig 1803., என்று மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார் (Thirukkural Translations in World Languages, ப.76).

இதனைத் தொடர்ந்து கார்ல் க்ரவுல், தமிழ் மொழியிலிருந்து லத்தீன் மொழியிலும் திருக்குறளை மொழிபெயர்த்துள்ளார். இந்த மொழிபெயர்ப்பு அவர் மறைவிற்குப் பின்னே வெளிவந்தது. 1864 ஆம் ஆண்டு க்ரவுல் மறைந்த பிறகு தமிழ் உரையுடன் இருந்த லத்தீன்

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07042026.08*

மொழிபெயர்ப்புக் கையெழுத்துப் பிரதியை, க்ரவுலின் மாணவர் வில்லியம் ஜெர்மன் "Kural of Tiruvalluvar: High-Tamil text with Translation into Common Tamil and Latin, Notes and Glossary 1865." என்று பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

திருக்குறள் சார்ந்த பல்வேறு மொழிபெயர்ப்புகளும் பதிப்புகளும் இன்றுவரை வெளிவந்திருப்பினும், கார்ல் க்ரவுலின் திருக்குறள் தமிழ் உரையுடன் கூடிய லத்தீன் மொழிபெயர்ப்புப் பதிப்பு பெரிய அளவில் பேசப்படாத ஒன்றாகவே இருந்து வருகிறது. எனவே, கார்ல் க்ரவுலின் திருக்குறள் லத்தீன் பதிப்பினையும் அப்பதிப்பில் இடம்பெற்றுள்ள தமிழ் உரையின் தன்மைகளையும் ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

**ஐரோப்பியர்களின் வருகையும் திருக்குறள் மொழிபெயர்ப்பும்**

கி.பி. 17 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு பண்டைத் தமிழ் இலக்கியங்களின் வாசிப்பு பின் தள்ளப்பட்டது. இதற்கான காரணத்தை மயிலை சீனி. வேங்கடசாமியின் கூற்றின் வழி அறியமுடிகிறது.

> **“தமிழ்க் கல்வியில் உயர்நிலை யடைந்த மாணவர்களும் வித்துவான்களும் புலவர்களும் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய சங்க நூல்களையும் சிலப்பதிகாரம், மணிமேகலை பெருங்கதை முதலிய சங்க காலத்து நூல்களையும், சங்க காலத்துக்குப் பிற்பட்ட நூல்களாகிய பதினெண் கீழ்க்கணக்கு, சீவக சிந்தாமணி, சூளாமணி முதலிய நூல்களையும் பயில்வது தொன்று தொட்டு வந்த வழக்கமாகும். ஆனால் இந்த வழக்கம் 18-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலிருந்து தடைப்பட்டது. மேற்சொன்ன நூல்களைப் படிக்கக் கூடாதென்று புதிய கருத்து ஒன்று அக்காலத்தில் தோன்றியது. சங்க நூல்களையும் சங்கம் மருவிய நூல்களையும் படிப்பவர் சமயப் பற்றற்றவர் என்றும் வீணர்கள் என்றும் பழிக்கப்பட்டனர். சைவ சமயத்தவர் இந்த நூல்களைப் படிக்கக் கூடாதென்று தடுக்கப்பட்டனர். சமயப் பற்றுக் காரணமாக உண்டான இந்தப் புதிய கருத்து தமிழரின் கலைகளுக்கும் பண்பாட்டுக்கும் பேராபத்தாக இருந்தது. தமிழ் மொழிக்கே ஆபத்தாக இருந்தது.”** (பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், பக் 76).

இக்காலகட்டத்தில் பழந்தமிழ் இலக்கியங்களைப் பலரும் அறிந்திருக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருந்தது என்பதை மேற்சொன்ன கூற்று வழி அறியமுடிகிறது. இச்சூழலின் பின்புலத்தில் 18 ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் அவர்கள் திருக்குறளை லத்தீன் மொழியில் மொழிபெயர்த்துள்ளார். எனினும், அவர் திருக்குறளின் முதல் இரண்டு பால்களை (அறம், பொருள்) மட்டுமே மொழிபெயர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. வீரமாமுனிவர் மேற்கொண்ட இந்த லத்தீன் மொழிபெயர்ப்பு முயற்சியானது, அவருக்குப் பின் வந்த ஐரோப்பிய அறிஞர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தது. அச்சேறாமல் வெறும் கையெழுத்துப் பிரதியாக இருந்தபோதிலும்,

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.08*

இதுவே திருக்குறளை மேலைநாட்டு மொழிகளில் கொண்டு செல்வதற்கான ஒரு தொடக்கப்புள்ளியாகவும், வலிமையான அடித்தளமாகவும் அமைந்தது. இதை க்ரவுல் அவர்களும் குறிப்பிடுகிறார்.

**"கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழர்களிடையே பணியாற்றிய புகழ்பெற்ற ரோமன் கத்தோலிக்க மிஷனரியான பெஸ்கி (Beschi -1747) என்பவரின் லத்தீன் மொழிபெயர்ப்பை, முதல் இரண்டு அதிகாரங்கள் என்னால் கலந்தாலோசிக்க முடிந்தது. அது இதுவரையில் கையெழுத்துப் பிரதியாக மட்டுமே இருந்து வந்தது. பெஸ்கியின் மொழிபெயர்ப்பானது மூலத்திற்கு நெருக்கமாக இல்லாமல் ஒரு விளக்கவுரை போல அமைந்துள்ளது, மேலும் அது தமிழ்க் கருத்துகளுக்கு ஓரளவிற்கு ஒரு கிறிஸ்தவச் சாயலையும் வழங்குகிறது". (** "Kural of Tiruvalluvar: High-Tamil text with Translation into Common Tamil and Latin, Notes and Glossary 1865." பக் VI).*

வீரமாமுனிவரின் மொழிபெயர்ப்பிற்குப் பிறகு, ஜெர்மன் மொழியில் **ஆகஸ்ட் ஃப்ரெடிக் காம்மெரர்** (Cammerer, A.F.) முதன் முதலில் முழுமையாகத் திருக்குறளை மொழிபெயர்த்தார். இது 1803ஆம் ஆண்டிலேயே பதிப்பாகவும் வெளிவந்துள்ளது (Cammerer, 1803). இவரைத் தொடர்ந்து எல்லிஸ் (F.W. Ellis), ஏரியல் (Ariel), வில்லியம் ட்ரூ (William Drew), ஜி.யு. போப் (G.U. Pope) எனப் பல அறிஞர்கள் திருக்குறளை மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளனர்.

**ஜெர்மானிய திருக்குறள் மொழிபெயர்ப்பு**

தமிழ் இலக்கிய வரலாற்றில் திருக்குறளை உலக நாடுகளுக்கு அறிமுகப்படுத்தியதில் ஜெர்மானிய அறிஞர்களின் பங்கு மிகவும் முக்கியமானது. பொதுவாகக் கார்ல் க்ரவுலின் பங்களிப்புகள் அதிகம் பேசப்பட்டாலும், அவருக்கு முன்பே திருக்குறள் முழுமையாக ஜெர்மானிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுவிட்டது என்பது குறிப்பிடத்தக்க ஒன்று. அந்த வகையில், முதன்முதலில் திருக்குறளை முழுமையாக ஜெர்மானிய மொழியில் மொழிபெயர்த்த பெருமை ஜெர்மானிய லூத்தரன் மதபோதகரான **ஆகஸ்ட் ஃப்ரெடிக் காம்மெரர்** (August Friedrich Cämmerer) அவர்களையே சாரும். இவர் மொழிபெயர்த்து விரிவான முன்னுரையுடன் வழங்கிய இந்த நூல், 1803-ஆம் ஆண்டு ஜெர்மனியின் நூரன்பெர்க் (Nurnberg) நகரில் அச்சு வடிவில் வெளியிடப்பட்டது. எல்லிஸ் (F.W. Ellis) போன்ற அறிஞர்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் வெளிவருவதற்கு முன்னரே, ஜெர்மானிய 'டோய்ச்' மொழியில் திருக்குறள் அச்சேறியது இதன் தனிச்சிறப்பாகும். இந்த நூலிற்கு "Das Thiruvalluvar Gedichte und Denkspruche" என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்நூலில் திருக்குறளின் 1330 குறள்களுக்குமான மொழிபெயர்ப்பு அதிகார வரிசைப்படி முறையாக வழங்கப்பட்டுள்ளது. இதைப் பற்றி ஆய்வாளர் முனைவர் கா. சுபாஷினி தனது கட்டுரையில் "**திருக்குறள் ஜெர்மன் மொழிபெயர்ப்பு 1803பற்றிய விரிவான அறிமுகம் மற்றும் விமர்சனம் 1807-ஆம் ஆண்டு ஜூன் 29-ல் நூரன்பெர்க் நகரின் 'பொது**

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07042026.08*

**இலக்கிய நாளேட்டில்' (Allgemeine Literatur Zeitung) பதிவாகியுள்ளது" (ஜெர்மனிய மொழிபெயர்ப்பில் திருக்குறள்-காரல் க்ரவுல் மொழிபெயர்ப்பு, ப. 4)** இவ்வாறான தொடக்கக்கால முயற்சிகளே பின்னாளில் கார்ல் க்ரவுல் போன்ற அறிஞர்கள் திருக்குறளை ஆழமாக ஆய்வு செய்ய ஒரு வலிமையான அடித்தளத்தை அமைத்துள்ளது. திருக்குறளைப் பிற மொழியினரிடம் பிரபலப் படுத்தியதில் ஜெர்மானிய மொழி முக்கியப் பங்காற்றியுள்ளது என்பதற்கு கார்ல் க்ரவுல் மற்றும் காம்மெரர் ஆகியோரின் இப்பணிகளே சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன.

**கார்ல் க்ரவுல் இலத்தின் திருக்குறள் மொழிபெயர்ப்பும் தமிழ் உரையும்**

திருக்குறள் உலக மொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தாலும், மூல நூலில் உள்ள முழுமையான கருத்தாழத்தை மற்ற மொழிகளில் கொண்டு செல்வது கடினமாகவே உள்ளது. கார்ல் க்ரவுல் அவர்கள் லத்தீன் மொழியில் திருக்குறளை மொழிபெயர்த்த போது, அவருக்கு முன்னோடியாக இருந்த வீரமாமுனிவரின் மொழிபெயர்ப்புப் பிரதி ஒரு முக்கிய முன்னோடியாக அமைந்தது. பின் க்ரால் 'பிப்லியோதேகா தமிழிகா' (Bibliotheca Tamulica) என்னும் தனது நூலில் திருக்குறளுக்குத் தமிழ் உரை எழுதுவேன் என உறுதி அளித்துள்ளார். அவை,

**"எனது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சில சூழ்நிலைகளின் காரணமாகவே, 1856-ஆம் ஆண்டிலேயே வெளியான எனது 'பிப்லியோதேகா தாமுலிகா' (Bibliotheca Tamulica) நூலின் மூன்றாம் பாகத்தின் முன்னுரையில் நான் அளித்த வாக்குறுதியை இப்போதுதான் என்னால் நிறைவேற்ற முடிகிறது. இருப்பினும், இந்த நீண்ட தாமதமானது இந்த படைப்பிற்கு நன்மையையே பயந்திருக்கும் என்று நம்புகிறேன் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் நண்பர்களுக்கு (அபிமானிகளுக்கு) இதை வழங்குவதில் நான் இப்போது மகிழ்ச்சியடைகிறேன்".** "Kural of Tiruvalluvar: High-Tamil text with Translation into Common Tamil and Latin, Notes and Glossary 1865." (பக் V).

திருக்குறளுக்குப் பலரும் உரை எழுதியிருந்தாலும், பெரும்பாலானோர் பரிமேலழகரின் உரையையே பின்பற்றுகின்றனர். அதில் கார்ல் க்ரவுலும் விதிவிலக்கல்ல. இவரும் திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரையையும் வேறு பலரின் உரையையும் பின்பற்றித் தமது உரையை வடிவமைத்துக் கொண்டதை,

**"நான் இங்கே வழங்கியிருக்கும் திருக்குறளின் தமிழ் மூலப்பரிதி (Text), முக்கியமாக வேதகிரி முதலியார், சரவணப் பெருமாளையர் மற்றும் குப்பையர் ஆகியோரின் அச்சுப் பதிப்புகளை அடிப்படையாகக் கொண்டது. மேலும், பரிமேலழகரின் பழைய உரையையும், பெஸ்கி (வீரமாமுனிவர்) தனது முதல் இரண்டு அதிகாரங்களுக்கான லத்தீன் மொழிபெயர்ப்பில் பின்பற்றிய (கையெழுத்துப் பிரதியாக இருந்த) மூலத்தையும் நான் இதற்காகப் பயன்படுத்தியுள்ளேன்."** "Kural of Tiruvalluvar: High-Tamil text with Translation into Common Tamil and Latin, Notes and Glossary 1865 (பக் V).

திருக்குறளை மொழிபெயர்ப்போர், மூல மொழியிலிருந்து அதன் பொருளைச் சிதைக்காமல் அப்படியே பிரதிபலிப்பது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. திருக்குறளை மூல மொழியான தமிழிலேயே வழங்கி, அதன் பின் தமிழில் உரை எழுதும் முறையைக் கார்ல் க்ரவுல் பின்பற்றியுள்ளார். திருக்குறளை அதன் வடிவத்திலேயே மொழிபெயர்ப்பது எளிதான காரியமல்ல. தமிழ் மொழியில் உள்ள இலக்கண முறைகளைப் பின்பற்றுவது என்பது பல மொழிபெயர்ப்பாளர்களுக்கு இன்றும் சவாலாகவே உள்ளது. கார்ல் க்ரவுல் தனது மொழிபெயர்ப்பை இலத்தீன் மொழியின் இலக்கண முறைப்படியே செய்துள்ளார் என்பதையும் அறிய முடிகின்றது.

**தெய்வத்தானாகாதெனினுமுயற்சிதன்**
**மெய்வருத்தக்கூலிதரும் (கூ)**

இலத்தின் மொழியில் **Etiamsi fato non bene cedat, industria ipsa corporis tui labori mercedem dabit.** ("Kural of Tiruvalluvar: High-Tamil text with Translation into Common Tamil and Latin, Notes and Glossary 1865." பக் 128) என்று மொழிபெயர்த்துள்ளார்.

**கார்ல் க்ரவுல் திருக்குறள் தமிழ் உரை**

கார்ல் க்ரவுல் தனது திருக்குறள் பதிப்பில் உயர்தமிழில் (High-Tamil) அமைந்த மூலபாடங்களுக்கு எளிய தமிழில் (Common Tamil) விளக்கத்தையும் இணைத்துள்ளார். இதனைத் தயாரிக்கும்போது, அவர் அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த வேதகிரி முதலியார் மற்றும் சரவணப் பெருமாளையர் ஆகியோரின் தமிழ் உரைகளைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். இருப்பினும், அவற்றை அப்படியே பின்பற்றிவிடாமல் க்ரவுல் தனி அணுகுமுறையைக் கையாண்டுள்ளார். இதுவரை எளிய தமிழ்ப் புத்தகங்களை மட்டுமே வாசித்தவர்கள் திருக்குறள் பயில்வதை எளிதாக்குவதற்காகவே இந்த முயற்சி உருவாக்கப்பட்டதாக அவர் விளக்குகிறார்.

**“இந்த நூலின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள சொல்லகராதி (glossary), போதுமானதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்; குறிப்பாக, செந்தமிழ் (High-Tamil) மூலத்தை எளிய தமிழுக்கு (common Tamil) மாற்றிக் கொடுத்துள்ளதோடு இது நெருங்கிய தொடர்புடையது. அதற்கு முன்னால் உள்ள குறிப்புகள் பெரும்பாலும் இலக்கணம் சார்ந்தவை. அத்துடன் விளக்கக் குறிப்புகளும் ஆங்காங்கே கலந்திருக்கும் அவை தமிழ் மற்றும் லத்தீன் மொழிபெயர்ப்புகளிலும் பரவலாகக் காணப்படுகின்றன."** "Kural of Tiruvalluvar: High-Tamil text with Translation into Common Tamil and Latin, Notes and Glossary 1865." (பக் V). என்பதன் வழி அறியமுடிகிறது. எனவே, உரையின் தெளிவான புரிதலுக்குத் தேவைப்படும் இடங்களில் அடைப்புக்குறிக்குள் சில சொற்களைச் சேர்ப்பதோ அல்லது கடினமான இலக்கண ( ) வடிவங்களுக்குப் பதிலாக நேரடியான எளிய தமிழ்ச் சொற்களை மாற்றீடு செய்வதோ அவரது முக்கியத் திட்டமாக இருந்துள்ளது.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in
*DOI: https://doi.org/10.63300/tm07042026.08*

**"அகர முதல வெழுத்தெல்லாமாதி**

**பகவன் முதற்றே யுலகு (க)**

எழுத்து (எழுத்துக்கள்) எல்லாம் அகரம் (ஆகிய) முதல (முதலையுடையன); உலகம் ஆதி பகவன் (ஆகிய) முதற்றே (முதலையுடையத்து.)

(இலத்தின் மொழியில்) Literae omnes principium habent literam A mundus principium habet numen primordial" (பக்.3)

**நிறைமொழிமாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும் (அ)**

நிறைகின்ற மொழியையுடைய மனிதரது (முனிவரது) பெருமையை (அவர்களது) மறை மொழி (மந்திரம்) காட்டிவிடும்.

(இலத்தின் மொழியில்) Magnitudinem hominum verbi numquam irriti verbum arcanum (sive maledicens sive benedicens) ostendet.

இத்தகைய உயர்தமிழுக்கு (High-Tamil) பதிலாக கார்ல் க்ரவுல் தனது தமிழ் உரையில் எளிய தமிழ்ச் சொற்களை மாற்றீடு செய்துள்ளார். மேலும், அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்கள், மூலபாடத்தின் மிகச் சுருக்கமாகவும் மாணவர்கள் இன்னும் எளிதாகப் புரிந்துகொள்வதற்காகவும் சேர்க்கப்பட்ட கூடுதல் விளக்கங்களாகத் தந்துள்ளார்.

நூலின் இறுதியில் அவர் இணைத்துள்ள கலைச்சொல் அகராதி (Glossary), இலத்தீன் மொழியில் அல்லாமல் அனைவருக்கும் புரியும்படி இருக்க ஆங்கிலத்தில் வழங்கப்பட்டுள்ளது.

**கலைச்சொல் அகராதி (Glossary)**

| **தமிழ்** | **ஆங்கிலம்** |
|---|---|
| ஆடவன் | Man |
| ஆடு | To move, To dance , To Play, To Act |
| ஆண்மை | Manhood, Manliness |

கார்ல் க்ரவுல் இணைத்துள்ள கலைச்சொல் அகராதி (Glossary) வாயிலாகத் திருக்குறளின் சொல்வளத்தை அறிந்துகொள்ள முடிகிறது. ஆனால் அந்தச் சொற்கள் எந்த எந்தத் திருக்குறளில் இடம்பெற்றுள்ளது என்பதை அறிந்துகொள்ள திருக்குறள் எண்கள் வழங்கப்படவில்லை.

திருக்குறளுக்கு இன்றுவரை எண்ணற்ற உரை வடிவங்கள் தோன்றியுள்ளன.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.08*

இருப்பினும், 19ஆம் நூற்றாண்டிலேயே திருக்குறளுக்கு 'எளிய தமிழ்' (Common Tamil) வடிவில் ஒரு உரை உருவானது என்பது மிகவும் கவனிக்கத்தக்க ஒன்றாகும். 1865 இல் வெளிவந்த இத்தகைய சிறப்புமிக்க க்ராலின் திருக்குறள் இலத்தீன் மொழிபெயர்ப்புப் பதிப்பு மற்றும் அவரது உரைப் பணிகள், இன்றைய தமிழ் ஆய்வு உலகில் பலரும் அறிந்திடாத ஒன்றாகவே காணப்படுவது வருத்தத்திற்குரியது.*

- சம்பந்தன். மா.சு., அச்சும் பதிப்பும்.
- மீனாட்சிசுந்தரம். கா., ஐரோப்பியர் தமிழ்ப்பணி.
- வேங்கடசாமி, மயிலை சீனி., பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்
- ஜெய்கணேஷ். பா., பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சமூக வரலாற்றில் திருக்குறள்.
- Parthasarathy Sa., Ashraf N.V.K., Rajendiran.C., Thirukkural Translations In World Languages., ValaiTamil Publicatuion., 2024.

இந்த நூல்கள் வழி கார்ல் க்ரவுலின் 1856ல் வெளிவந்த ஜெர்மானிய திருக்குறள் மொழிபெயர்ப்பு பற்றிய தகவல்களைக் அறியமுடிகின்றது. ஆனால் தமிழ் உரையும் லத்தீன் மொழிபெயர்ப்பும் கொண்டு 1865ல் வெளிவந்த **"Kural of Tiruvalluvar: High-Tamil text with Translation into Common Tamil and Latin, Notes and Glossary 1865."** இந்நூல் பற்றிய செய்திகள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிட்டக்கவொன்றாகும்.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.08*

**கார்ல் க்ரவுலின் உயர் தமிழ் மற்றும் எளிய தமிழ் வேறுபாடுகள்.**

| உரையாசிரியர்கள் | உயர் தமிழ் | எளிய தமிழ் | தமிழ்-தமிழ் அகர முதலி |
|---|---|---|---|
| கார்ல் க்ரவுல் | ▪ பூண்டார் (23)<br>▪ உரன் (24)<br>▪ ஆகுல (34)<br>▪ கொழுநனை (55) | ▪ கொண்டவரது<br>▪ அறிவு<br>▪ ஆரவாரம்<br>▪ புருடனை | ▪ கணவன் (பூண்டார்)<br>▪ வலிமை, திண்மை, திடம், அறிவு, ஊக்கம். (உரன் )<br>▪ ஆரவாரம் (ஆகுல)<br>▪ கணவனுடன் பிறந்தான், அளியன், மைத்துனை, கணவன் (கொழுநனை ) |
| பரிமேலழகர் | ▪ பூண்டார் (23)<br>▪ உரன் (24)<br>▪ ஆகுல (34)<br>▪ கொழுநனை(55) | ▪ பூண்டாரது<br>▪ திண்மை<br>▪ ஆரவார<br>▪ கொழுநனை | |

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07042026.08*

| | | | |
|---|---|---|---|
| வேதகிரி முதலியார் | ▪ பூண்டார் (23)<br>▪ உரன் (24)<br>▪ ஆகுல (34)<br>▪ கொழுநனை(55) | ▪ கொண்டவரது<br>▪ அறிவு<br>▪ ஆரவார குணம்<br>▪ தனது தெய்வமாகிய கணவன் | |

**முடிவுரை**

உலகப் பொதுமறை என்று போற்றப்படும் திருக்குறள், காலங்களைக் கடந்து உலக மொழிகள் பலவற்றில் பயணித்தாலும், 1865 இல் வெளிவந்த கார்ல் க்ரவுல் (Karl Graul) லத்தீன் மற்றும் எளிய தமிழ் உரைப் பதிப்பு என்பது தமிழ் உரை வரலாற்றில் ஒரு தனித்துவமான மைல்கல்லாகும். 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ் இலக்கியங்களைக் கற்பதற்கு விதிக்கப்பட்டிருந்த சமூகத் தடைகளை உடைத்து, ஏட்டுச் சுவடிகளில் இருந்த குறளை அச்சு இயந்திரத்தின் உதவியுடன் உலகத் தரத்திற்கு உயர்த்திய பெருமையில் ஐரோப்பிய அறிஞர்களுக்கும் தனித்த இடமுண்டு. கார்ல் க்ரவுல் தனது பதிப்பில் கையாண்ட 'உயர்தமிழ்' (High-Tamil) மற்றும் 'எளிய தமிழ்' (Common Tamil) என்ற இந்த இரண்டு அணுகுமுறை, அந்நாளில் தமிழைப் பயின்ற வெளிநாட்டு மாணவர்களுக்கு மட்டுமன்றி, எளிய மக்களுக்கும் குறளின் சாரத்தைச் கொண்டு சேர்த்தது. குறிப்பாக அடைப்புக்குறிக்குள் ( )அவர் தந்த கூடுதல் விளக்கங்கள், மூலத்தின் கருத்தைச் சிதைக்காமல் நவீன உரைநடைக்குக் குறளை மாற்றம் செய்தன. அவர் வழங்கிய கலைச்சொல் அகராதி (Glossary) திருக்குறளின் சொல் வளத்தையும் அதை ஆங்கிலம் வழி அறிந்துகொள்ளவும் துணைசெய்தன. வீரமாமுனிவர், ஆகஸ்ட் காம்மெரர் போன்ற முன்னோடிகளின் பணிகளைத் தழுவியும், அதே நேரத்தில் வீரமாமுனிவரின் 'கிறித்தவச் சாயலை' விட்டுப் பரிமேலழகரின் உரையைத் துல்லியமாகப் பின்பற்றியும் கார்ல் க்ரவுல் தனது நேர்மையான ஆய்வை வெளிப்படுத்தியுள்ளார்.

இன்றுவரை திருக்குறளுக்குப் பல உரைகள் தோன்றியிருந்தாலும், 19ஆம் நூற்றாண்டிலேயே ஒரு ஜெர்மானிய அறிஞரால் 'எளிய தமிழ்' வடிவில் ஒரு உரை உருவாக்கப்பட்டிருப்பது தமிழின் உலகளாவிய வளர்ச்சிக்குச் சான்றாகும். இருப்பினும், இத்தகைய அரிய பொக்கிஷமான க்ரவுலின் இலத்தின் மொழிபெயர்ப்பு மற்றும் தமிழ் உரைப் பதிப்பு, இன்றைய ஆய்வுலகில் போதிய கவனம் பெறவில்லை என்பதை அறியமுடிகிறது. எனவே, கார்ல் க்ரவுலின் அறியப்படாத இந்தச் சிறந்த திருக்குறள் பணியை மீட்டெடுத்து, அவற்றை இன்றைய தலைமுறை மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் கொண்டு செல்வது திருக்குறள் சார்ந்த உலகளாவிய புரிதலை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.08*

**துணைநூற்பட்டியல்**

[1]. The Internet Archive archive.org., திருக்குறளின் அரிய பதிப்புகளை உள்ளடக்கிய இணைய ஆவணக் காப்பகம்.

[2]. சம்பந்தன். மா.சு., அச்சும் பதிப்பும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை 1997.

[3]. சுபாஷினி. க., ஜெர்மனிய மொழிபெயர்ப்பில் திருக்குறள்-காரல் க்ரால் மொழிபெயர்ப்பு.,

[4]. மீனாட்சிசுந்தரம். கா., ஐரோப்பியர் தமிழ்ப்பணி., சென்னைப் பல்கலைக்கழகம்., 2003.

[5]. மோகன், ஜெ., (பதி) களத்தூர் வேதகிரி முதலியார், திருக்குறள் மூலமும் உரையும், சிவாலயம், சென்னை, 2018.

[6]. வடிவேலுசெட்டியார். கோ, (பதி.), தெளிபொருள் விளக்கமும், கருத்துரையும், குறிப்புரையும் (திருக்குறளும் பரிமேலழகர் உரையும்) ஆங்கில மொழிபெயர்ப்புடன் இரண்டாம் பகுதி பொருட்பால், மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை, 1976.

[7]. Cammerer, AF., Des Tiruvalluwer Gedichte und Denkspruche. Tirukkural With German Translation, Leipzing,. 1803.

[8]. Karl Graul., Kural of Tiruvalluvar High-Tamil text with Translation into Common Tamil and Latin., Notes and Glossary 1865.

[9]. Parthasarathy Sa., Ashraf N.V.K., Rajendiran.C., Thirukkural Translations In World Languages., ValaiTamil Publicatuion., 2024.

[10]. வேங்கடசாமி, மயிலை சீனி., பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், மெய்யப்பன் தமிழாய்வம், சிதம்பரம், 2001.

[11]. வேங்கடசாமி, மயிலை சீனி., பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், மெய்யப்பன் தமிழாய்வம், சிதம்பரம், 2001.

[12]. ஜெய்கணேஷ். பா., பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சமூக வரலாற்றில் திருக்குறள்.,

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).